பாகம் – 5 : சே.ராகுல், 18, சக்தி நகர், அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 6 : கு.அஜீத்குமார், 1, கருமாரியம்மன் கோயில் தெரு, அஞ்சுகம் நகர், அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 7 : க.கதிர்வேல், 11/63, 2–வது தெரு, பாரதியார் நகர், அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 8 : ம.சிவச்சந்திரன், 91432, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 9 : சீ.ராஜ்குமார், 140, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 10 : அ.கோபி, 534, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 11 : சு.ஹபிரீஸ், 551, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 12 : ச.பிரதீஷ், 59, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 13 : ம.ஹரிகரன், 1506, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 14 : லோ.குகன், 3934, 3886, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 15 : ப.பாலாஜி, 2502, த.நா.வீ.வா.கு., அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 16 : ச.கார்த்திக், 8901, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 17 : வீ.யோகிராம், 6535, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 18 : பி.பிரவீன்குமார், 4252, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 19 : ம.பாலகுமார், 3885, த.நா.வீ.வா.கு., அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 20 : பி.சண்முகம், 4252, த.நா.வீ.வா.கு., அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 21 : தீ.ஜெயராஜ், 5721, த.நா.வீ.வா.கு., அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 22 : கு.முகேஷ்குமார், 5722, த.நா.வீ.வா.கு., அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 23 : த.ராம்குமார், 54/08, , த.நா.வீ.வா.கு., அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 24 : பெ.கோபி, 3935, த.நா.வீ.வா.கு., அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 25 : த.மணிகண்டன், 6795, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 26 : ஜீ.முகமது ரிஃப்பாய், 8511, த.நா.வீ.வா.கு., அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 27 : வீரய்யன், 7259, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 28 : மு.பூஞ்செல்வன், 7747, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 29 : ஜெ.தீபக், 8284, த.நா.வீ.வா.கு, பாபா கோயில் தெரு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 30 : சு.ரஞ்சித் வருண், 14, யமுனா தெரு, அபர்ணா நகர், அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 31 : பு.மகேஸ்வரன், 8978, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 32 : கு.கிஷோர், 9177, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 33 : ஆ.சூர்யா, 9274, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 34 : சி.லட்சுமணன், 832, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 35 : மு.வெங்கடேஷ், 2, கணேஷ் நகர், 12–வது தெரு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 36 : கோ.சீனிவாசன், 7057, த.நா.வீ.வா.கு, அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 37 : சே.வடிவழகன், 5, காரணிய தெரு, மாருதி ராம் நகர், அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 38 : கோ.சீனிவாசன், 8, அண்ணா தெரு, சிவசக்தி நகர், அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 39 : ச.சோமசுந்தரம், 23, மகாலிங்கம் தெரு, பவானி நகர், அயப்பாக்கம், சென்னை.
பாகம் – 40 : ஜெ.பாலகுமரன் 10, கற்பக விநாயகர் கோயில் தெரு, பவானி நகர், அயப்பாக்கம், சென்னை.

**அடையாளம்பட்டு ஊராட்சி**

**1–வது கிளை**

**அமைப்பாளர் :** ச.சரவணன், 1/106, பெருமாள் கோயில் தெரு, அடையாளம்பட்டு, சென்னை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) வி.குகன், 106, பெருமாள் கோயில் தெரு, அடையாளம்பட்டு, சென்னை. (2) ம.விக்ரம், பனஞ்சாலை தெரு, அடையாளம்பட்டு, சென்னை. (3) மு.விஜயகுமார், 1/44, குளக்கரை தெரு, அடையாளம்பட்டு, சென்னை.

**பாக அமைப்பாளர்கள் :**

பாகம் – 64 : பெ.சதீஷ்குமார், 420, கணபதிபுரம், அடையாளம்பட்டு, சென்னை.
பாகம் – 65 : சே.மணிகண்டன், 1/24, பனஞ்சாலை தெரு, அடையாளம்பட்டு, சென்னை.
பாகம் – 93 : வெ.அஜீத்குமார், 1/56, குளக்கரை தெரு, அடையாளம் பட்டு, சென்னை.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 23–08–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

6



குளச்சல் ஊர் மற்றும் அதை சார்ந்த கிராமங்களில் உள்ள சுமார் 50 ஆயிரம் மக்களின் நீண்டகால கோரிக்கையான குளச்சல் மீன்பிடி துறைமுகம் விரிவாக்கம் செய்வதற்காக 350 கோடி ரூபாய்க்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அதற்கான நிதியினை நபார்டு (NABARD) வங்கி மூலம் பெறுவதற்கான ஆக்கப்பூர்வமான முயற்சிகள் நடைபெற்று கொண்டிருப்பதற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை மாநில மீனவரணி செயலாளர் ஏ. ஜோசப் ஸ்டாலின் தலைமையில் அருட்பணி Fr டங்ன்ஸடன் (CPD director கோட்டாறு மறை மாவட்டம் ஆயர் அலுவலகம்), அருட்பணி Fr ஜெகன். சா (குளச்சல் ஊர் பங்குதந்தை), Capt ஜான்சன். M.C.(செயலாளர், குமரி மாவட்ட விசைப்படகு மீன்பிடிப்போர் நலச்சங்கம்) வர்க்கீஸ் (தலைவர்), ஜஸ்டின் (பொருளாளர்), ஆன்றனி (துணைத்தலைவர்) பிராங்கிளின் (முன்னாள் செயலாளர்) ஆகியோர் நேரில் சந்தித்து தங்களின் நன்றியைத் தெரிவித்தனர்.



திருச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு – பெரியார் மாளிகையில் இருந்த திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார் அவருடன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் பெரம்பலூர் பாராளுமன்ற எம்.பி. அருண் நேரு, மாநகராட்சி மேயர் அன்பழகன், தி.மு.க. மத்திய மாவட்ட துணை செயலாளர் முத்துச்செல்வம், பொருளாளர் துரைராஜ், குடமுருட்டி சேகர், வழக்கறிஞர்கள் கவியரசன் அந்தோணி மணிபாரதி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

## மீண்டும் மு.க.ஸ்டாலின் அவர்களே முதல்வராவார்!

# அமித்ஷாவின் அரசியல் தமிழ்நாட்டில் எடுபடாது!

## நெல்லையில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

**நெல்லை.ஆக.24-**

**தி.மு.க.வை வேரோடு பிடுங்க வேண்டும் என அமித்ஷா சொல்கிறார். வேரோடு பிடுங்கப்படும் பயிர் தான் மிக பிரம்மாண்டமாக வளரும். தமிழகத்தில் எங்களுக்கு யாருமே போட்டி கிடையாது. பா.ஜ.க. அ.தி.மு.க. கூட்டணியை அவர்கள் தொண்டர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை இதையெல்லாம் வைத்துக்கொண்டு வெற்றி பெறப் போகிறோம் என பா.ஜ.க.வினர் சொல்கின்றனர் என நெல்லையில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு செய்தியாளர்களிடம் பேட்டியின் போது தெரிவித்தார்.**

நெல்லை மாநகராட்சி பாளையங்கோட்டை பேருந்து நிலையம் அருகில் ரூபாய் 5 கோடி மதிப்பில் அமைக்கப்பட உள்ள முதல்வர் படைப்பகம் கட்டுமானப் பணிகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தனர்.

இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நெல்லையில் நடைபெற்ற பா.ஜ.க கூட்டத்தில் அமித்ஷா தி.மு.க.வை வேரோடு பிடுங்கி அகற்றுவோம் என சொல்கிறார். விவசாயத்தில் வேரோடு பிடுங்கி நட்டால் தான் பயிர் நன்றாக விளையும்.15 வருடங்களாக பா.ஜ.க வேரோடு பிடுங்கும் வேலையை தான் பார்த்துக்



கொண்டிருக்கிறது. அவர்களால் எதையும் செய்ய முடியவில்லை. தி.மு.க. கூட்டணி தான் வெற்றி பெற்றது. வருங்காலத்திலும் தி.மு.க. தான் வெற்றி பெறும்.

**அவர்கள் நினைப்பது நடக்காது!**

நயினார் நாகேந்திரன் தலைவராக மேடையில் உள்ளார். மிகப்பெரிய கூட்டத்தை கூட்டியுள்ளார் அவர்களது ஆசையை அவர்கள் சொல்லி வருகிறார்கள்.எங்களது ஆட்சியை நன்றாக இருப்பதாக எப்படி பா.ஜ.க. வினர் சொல்வார்கள்.எங்கள் ஆட்சி மீது பா.ஜ.க வைப்பது குற்றச்சாட்டு அல்ல, அவர்களது ஆசை. நாங்கள் தான் தேர்தலில் வெற்றி பெறுவோம். அமித்ஷா பேசிய இதே ஊரில் மிகப்பெரிய வெற்றியை பெறுவோம். அவர்கள் நினைப்பது நடக்காது.

அ.தி.மு.க. பா.ஜ.க. இருவரும் கூட்டணி. ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் இருந்த போது இருண்ட ஆட்சியாக இருந்தது. அமித்ஷா கண்ணுக்குத் தெரியவில்லை. தமிழகத்திற்கு இதுவரை அமித்ஷா மூன்று முறை வந்து விட்டார். தமிழகத்திற்கு வரும்போதெல்லாம் அமித்ஷா கூட்டணி ஆட்சி என்கிறார், எடப்பாடி எப்போதும் தனித்து ஆட்சி என்கிறார்.இதற்கு அமித்ஷாவும் விளக்கம் சொல்லவில்லை, எடப்பாடியும் விளக்கம் சொல்லவில்லை.

அ.தி.மு.க.வின் கூட்டணியை கீழே உள்ளவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. அ.தி.மு.க- பி.ஜே.பி. தொண்டர்கள் இந்த கூட்டணியை ஏற்றுக் கொள்ளவில்லை. இதை வைத்துவிட்டு அவர்கள் நாங்கள் ஜெயிக்கப் போகிறோம் என சொல்கிறார்கள்.

**முதல்வருக்கு ஆதரவு பெருகி வருகிறது!**

முதல்வரை யார் எந்த பெயரை வைத்து அழைத்தாலும் மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சராக தளபதி அவர்கள் தான் வரப்போகிறார். பொதுமக்கள், மகளிர் போன்றோர் மிகப்பெரிய ஆதரவை முதல்வர் அவர்களுக்கு தந்து வருகின்றனர். எம்.ஜி.ஆருக்கு இருந்த மகளிர் ஆதரவை தாண்டி இப்போது முதலமைச்சருக்கு அவர்களது ஆதரவு பெருகி வருகிறது. நடைபெற உள்ள தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் தி.மு.க ஆட்சி அமையும். மீண்டும் தமிழக முதல்வராக தி.மு.க தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வருவார்கள்.

தோற்றுப் போய்விடுவோம் என எண்ணி தான் பீகார், ஆந்திரா போன்ற இடங்களில் பிரச்சினைகளை பா.ஜ.க. வினர் செய்து வருகின்றனர். ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு இருதலைக்கொள்ளி எறும்பாக இருந்து வருகிறார். தமிழகத்தில் தி.மு.க.விற்கு போட்டியே கிடையாது. எதிரி யாராக இருந்தாலும் நாங்கள் தான் வெற்றி பெறுவோம்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், மேயர் ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மோனிகா ராணா, துணை மேயர் ராஜு, மாவட்ட ஊராட்சி தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பஞ்சாயத்து முன்னேற்றக் குறியீட்டைச் செயல்படுத்த

# மாநிலம் வாரியாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஆக.24–

தமிழ்நாடு உட்பட மாநில வாரியாக பஞ்சாயத்து முன்னேற்ற குறியீடு PAI 2.0 ஐ செயல்படுத்துவதற்காக ஒன்றிய அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட நிதி; மற்றும் தமிழ்நாட்டில் பஞ்சாயத்து முன்னேற்ற குறியீடு (PAI) 2.0 ஐ செயல்படுத்துவதற்காக அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் யாவை? என்று மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் பஞ்சாயத்துராஜ் ராஜாங்க அமைச்சர் பேராசிரியர் எஸ்.பி. சிங்பாகல் எழுத்துபூர்வமாக அளித்த பதில் வருமாறு:–

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், செயல்பாட்டாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு அவர்களின் செயல்பாடு மற்றும் பொறுப்புகளை திறம்பட நிறைவேற்று வதற்காக அவர்களின் நிர்வாக திறன்களை மேம்படுத்துவதற்காக 2022–23 நிதியாண்டில் இருந்து மாநிலங்கள் /யூனியன் பிரதேசங்களில் ஒன்றிய அரசின் ஆதரவுடன் புதுப்பிக்கப் பட்ட ராஷ்ட்ரிய கிராமஸ்வராஜ் அபியான் (RGSA) திட்டத்தை பஞ்சாயத்துராஜ் அமைச்சகம் செயல்படுத்தி



வருகிறது.

மாநிலங்கள் /யூனியன் பிரதேசங்களின் 2025 26 நிதியாண்டிற்கான RGSA இன் வருடாந்திர செயல்திட்டத்தில், சிறப்பு பயிற்சித் திட்டங்களின் கீழ் PAI 2.0 இன் செயல்பாட்டை செயல்படுத்துவதற்கான பட்டறைகள்/ பயிற்சித் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவை தமிழ்நாடு மாநிலம் உட்பட ஒன்பது கருப்பொருள்கள் தரவு சேகரிப்பு செயல்முறை சரிபார்ப்பு வழிமுறைகள் போன்றவற்றில் உள்ளூர் குறிகாட்டிகளின் கட்டமைப்பில் PRIகளின் திறனை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

PAI பதிப்பு 2.0 ஐ செயல்படுத்துவது குறித்த பயிற்சி/ பட்டறைகளை நடத்துவதற்கு அங்கீகரிக்கப் பட்ட மாநில/ யூனியன் வாரியான நிதிகள் இணைப்பு–I இல் வழங்கப்பட்டுள்ளன.

மே 2025 இல் பஞ்சாயத்து முன்னேற்ற குறியீட்டு (PAI) பதிப்பு 2.0 இல் ஒரு நாள் தேசிய எழுத்துப் பயிற்சியை அமைச்சகம் ஏற்பாடு செய்தது.

இந்தநிகழ்வின்போது PAIஇன் மாநில நோடல் அதிகாரிகள் மாவட்ட மற்றும் தொகுதி அதிகாரிகள் தொழில்நுட்ப அதிகாரிகள் மற்றும் பிற பங்குதாரர்கள் PAI பதிப்பு 2.0 இன் பல்வேறு அம்சங்களில் கவனம் செலுத்தினர் மேலும் PAI போர்ட்டலின் செயல்பாடுகள் குறித்த நேரடி பயிற்சியும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அதன்படி கிராம பஞ்சாயத்து செயல்பாட்டாளர்கள் PRI அதிகாரிகள் மற்றும் பிற பங்குதாரர்களுக்காக PAI பதிப்பு 2.0 குறித்த பட்டறைகள் மற்றும் பயிற்சித் திட்டங்களை தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்துள்ளது. கிராம பஞ்சாயத்துகளின் தரவு உள்ளீட்டை எளிதாக்குவதற்காக தரவு புள்ளிகளை உள்ளமைத்து தரவு சேகரிப்பு வடிவமைப்பையும் அரசு வெளியிட்டுள்ளது. PAI பதிப்பு 2.0 க்கான தரவு சேகரிப்பு மற்றும் உள்ளீடு தற்போது நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி துணிநூல் துறையில் பதனிடும் பிரிவு தொழிற்சாலைகளுக்கு, 25 விழுக்காடு மூலதன முதலீட்டு மானியத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, செயல்படுத்திட தமிழ்நாடு அரசு அடுத்த ஐந்தாண்டுகளுக்கு மொத்தம் ரூ. 268.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளமைக்கு, திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல் மற்றும் மதுரை பகுதிகளிலுள்ள, அனைத்து ஜவுளிப் பதனிடுவோர் சங்கங்களின் பிரதிநிதிகள் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், ஆர். காந்தியை 22.08.2025 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர். இந்நிகழ்வில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர், திருமதி. வே. அமுதவல்லி, துணிநூல் துறை இயக்குநர், திருமதி இரா. லலிதாமற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.